**World Tamil Christian Fellowship**
60, High Worple, Rayners Lane, Harrow
Middlesex, HA2 9SZ, United Kingdom
www.wcflondon.com
wcflondon@gmail.com

# இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை – பாடம் 26

## வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பு

*மில்லேனியத்தில்,*

1. *இயேசு கிறிஸ்துவே ராஜாதி ராஜாவாகவும் தேவாதி தேவனாகவும்.*
2. *சாத்தானை அகற்றி 1000 ஆண்டுகள் பிணைக்கப்பட்டிருப்பதையும்*
3. *பரிசுத்தவான்களாகிய நாம், இயேசு கிறிஸ்துவோடு ஆட்சி செலுத்துவோம்.*

*என்பதை குறித்து பார்த்தோம்.*

*மேலும், நாம் ராஜ்யத்தின் அரசியல், ஆவிக்குரியவை மற்றும் சரீர சம்பந்தமானவையை குறித்து பார்த்தோம்.*

*1000 ஆண்டுகால ஆட்சியின் இறுதியில் நிகழப்போவதைப் பற்றி விளக்கமாக இப்போது நாம் பார்க்கலாம்.*

## சாத்தான் விடுவிக்கப்பட்டு மேலும் அவன் மீண்டுமாக வருவான்.

பலரும் சாத்தானை பிணைப்பதை பற்றி தவறாக ஜெபம் செய்கின்றனர். ஆனால் அது மிலேனியம் வரும் வரையில் நிகழாது அப்படியே வந்தாலும் அவன் திரும்பவும் விடுவிக்கப்படுவான்.

இப்போது சாத்தானை பிணைக்கும் வல்லமை நமக்கு கொடுக்கப்படவில்லை. பல பெந்தேகோஸ்தே மக்கள் இந்த ஜெபத்தை ஏறெடுப்பார்கள். ஆனால் இது வேதபுத்தகத்தில் எங்கும் இல்லை.

**வெளி** *20:7-10,* [7]அந்த ஆயிரம் வருஷம் முடியும்போது சாத்தான் தன் காவலிலிருந்து விடுதலையாகி, [8]பூமியின் நான்கு திசைகளிலுமுள்ள ஜாதிகளாகிய கோகையும் மாகோகையும் மோசம்போக்கும்படிக்கும், அவர்களை யுத்தத்திற்குக் கூட்டிக்கொள்ளும்படிக்கும் புறப்படுவான்; அவர்களுடைய தொகை கடற்கரை மணலத்தனையாயிருக்கும். [9]அவர்கள் பூமியெங்கும் பரம்பி, பரிசுத்தவான்களுடைய பாளையத்தையும், பிரியமான நகரத்தையும் வளைந்து கொண்டார்கள்; அப்பொழுது தேவனால் வானத்திலிருந்து அக்கினி இறங்கி அவர்களைப் பட்சித்துப்போட்டது. [10]மேலும் அவர்களை மோசம்போக்கின பிசாசானவன், மிருகமும் கள்ளத்தீர்க்கதரிசியுமிருக்கிற இடமாகிய அக்கினியும் கந்தகமுமான கடலிலே தள்ளப்பட்டான். அவர்கள் இரவும் பகலும் சதாகாலங்களிலும் வாதிக்கப்படுவார்கள்.

நாம் கீழே கொடுக்கப்பட்டதை மேலே உள்ள வசனத்திலிருந்து தெளிவாக புரிந்து கொள்ளலாம்.

a) 1000 ஆண்டுகள் இறுதியில் அவன் விடுவிக்கப்படுவான்
b) அவன் செல்லும்படிக்கு தேவன் அவன் கட்டுகளை தளர்த்துவார்
c) குழந்தைகள் இந்த ராஜ்யத்தில் பிறக்கும்
d) சாத்தான் பாவிகளை ஒன்று சேர்ப்பான்
e) குழந்தைகள் வெளிப்புறமாக கிறிஸ்துவின் கட்டளைகளுக்கு உட்பட்டு இருப்பார்கள். ஆனால் அவர்களுடைய இருதயத்தில் அவரை எதிர்த்து இருப்பார்கள்.
f) தேவனுக்கு எதிராக கூடும் மக்கள் ஏராளமாக இருப்பார்கள். அவர்கள் மணலைப்போல் இருப்பார்கள் என்று வ 8 கூறுகிறது.
g) கோகும் மாகோகும் எசேக்கியேல் 38 மற்றும் 39ஆம் அதிகாரங்களில் தீர்க்கதரிசனமாக குறிப்பிட்டது போல அல்ல.
h) வ 9இல் குறிப்பிட்டது போல தேவனிடத்தில் இருந்து வரும் அக்கினி அனைவரையும் அழித்து விடும்.
i) பூமியும் அழிந்து போகும் வ 9
j) சாத்தான் நியாயந்தீர்க்கப்படுவான்.
k) அக்கினியும் கந்தகமுமான கடலிலே சாத்தான் தள்ளப் படுவான்
l) அந்திகிறிஸ்துவும் கள்ளத்தீர்க்கதரிசியும் அக்கினியும் கந்தகமுமான கடலிலே தள்ளப்படுவார்கள்
m) பூமியிலுள்ள பாவிகளும் அக்கினி கடலுக்குள் தள்ளப்படுவார்கள்
n) தேவன் ஏதேன் தோட்டத்தில் துவக்கியது இங்கே முடிவடையும்.
o) மனிதநேயம் இனி ஒருபோதும் வாழாது.

*உபத்திரவத்தை கடந்து வந்த பரிசுத்தவான்கள் 1000 ஆண்டுகள் ஆண்டு ஆட்சி செலுத்துகின்றனர்.*

## *வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பு/ பாவிகளின் உயிர்த்தெழுதல்*

***வெளி 20:11-15,*** *[11]பின்பு, நான் பெரிய வெள்ளைச்
சிங்காசனத்தையும் அதின்மேல் வீற்றிருக்கிறவரையும்
கண்டேன்; அவருடைய சமுகத்திலிருந்து பூமியும் வானமும்
அகன்றுபோயின; அவைகளுக்கு இடங்காணப்படவில்லை.
[12]மரித்தோராகிய சிறியோரையும் பெரியோரையும் தேவனுக்கு
முன்பாக நிற்கக்கண்டேன்; அப்பொழுது புஸ்தகங்கள்
திறக்கப்பட்டன; ஜீவபுஸ்தகம் என்னும் வேறொரு புஸ்தகமும்
திறக்கப்பட்டது; அப்பொழுது அந்தப் புஸ்தகங்களில்
எழுதப்பட்டவைகளின்படியே மரித்தோர் தங்கள் தங்கள்
கிரியைகளுக்குத்தக்கதாக நியாயத்தீர்ப்படைந்தார்கள்.
[13]சமுத்திரம் தன்னிலுள்ள மரித்தோரை ஒப்புவித்தது;
மரணமும் பாதாளமும் தங்களிலுள்ள மரித்தோரை
ஒப்புவித்தன. யாவரும் தங்கள் தங்கள் கிரியைகளின்படியே
நியாயத்தீர்ப்படைந்தார்கள். [14]அப்பொழுது மரணமும்
பாதாளமும் அக்கினிக்கடலிலே தள்ளப்பட்டன. இது
இரண்டாம் மரணம். [15]ஜீவபுஸ்தகத்திலே
எழுதப்பட்டவனாகக் காணப்படாதவனெவனோ அவன்
அக்கினிக்கடலிலே தள்ளப்பட்டான்.*

***யார் இந்த மனிதர்கள்?***

***வெளி 20:5-6,*** *[5]மரணமடைந்த மற்றவர்கள் அந்த ஆயிரம்
வருஷம் முடியுமளவும் உயிரடையவில்லை. இதுவே முதலாம்*

*உயிர்த்தெழுதல். [6]முதலாம் உயிர்த்தெழுதலுக்குப் பங்குள்ளவன் பாக்கியவானும் பரிசுத்தவானுமாயிருக்கிறான்; இவர்கள்மேல் இரண்டாம் மரணத்திற்கு அதிகாரமில்லை. இவர்கள் தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் முன்பாக, ஆசாரியராயிருந்து, அவரோடேகூட ஆயிரம் வருஷம் அரசாளுவார்கள்.*

*இந்த மக்கள் தான் ஹெதேஸில் (Hades) நியாத்தீர்ப்புக்காக காத்திருப்பவர்கள்.*

*முதலாம் உயிர்த்தெழுதல் பரிசுத்தருக்கும் ஆசீர்வதிக்கப்பட்டவருக்குமானது.*

*இரண்டாம் உயிர்த்தெழுதலில் பாவிகளுக்கும் அருவருப்பானவர்களுக்குமானது*

*முதல் உயிர்த்தெழுதலை தவற விட்டவர்கள் இரண்டாம் உயிர்த்தெழுதலை சந்தித்து பின்னர் இரண்டாம் மரணத்தையும் சந்திப்பார்கள்.*

*முதல் மரணம் = உடலின் மரணம்*

*இரண்டாம் மரணம் = ஆவிக்குரிய மரணம்*

*முதலில் உயிர்த்தேழுந்தவர்கள் இரண்டாம் மரணத்தில் இருந்து தப்பிப்பார்கள்*

*அதனால், இவர்கள்தான் முதல் உயிர்த்தெழுதலில் இல்லாமல் ஹதேஸில் (Hades) நியாயத்தீர்ப்புக்காக காத்திருப்போர்.*

*வ 11, நீங்கள் தேவனாகிய இயேசு கிறிஸ்துவை உங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளவில்லை என்றால் நீங்கள் இதை சந்திப்பீர்கள்.*

**யோவான் 5:28-29**, [28]இதைக்குறித்து நீங்கள் ஆச்சரியப்படவேண்டாம்; ஏனென்றால் பிரேதக் குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங் காலம் வரும்; [29]அப்பொழுது, நன்மைசெய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும், தீமை செய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள்.

யோவான் 11இல் இயேசு அந்த லாசருவின் கல்லறைக்கு முன் நின்றது நினைவில் உள்ளதா. அவர் அவனுடயை பெயரை அழைத்தபோது அவன் அப்படியே உயிருடன் வந்தான்!

மனித சரித்திரத்தில் தேவபயமற்று இறந்தவர்கள் எல்லாம் ஷியோல் அல்லது ஹேடீஸ் (Sheol or Hades) என்ற இடத்திற்கு சென்றுவிட்டனர். ஆதாம் காலத்தில் மரித்தவர்களிலிருந்து இன்று மரித்தவர்கள் வரை மற்றும் கிறிஸ்து மீண்டும் வரும் வரை மரித்தவர்கள் அனைவரும் ஷியோல் அல்லது ஹேடீஸ் (Sheol or Hades) என்ற இடத்தில்தான் இருக்கிறார்கள். அவர்கள் தங்களுடைய நித்திய ஆன்மாவில் உள்ளனர். அவர்களுடைய உடல் உயிர்த்தெழவில்லை. இந்த பூமியிலுள்ள எல்லா தேவபக்தியற்ற உடல்களும் உயிரிழந்திருக்கின்றன, அவற்றின் எலும்புகள் மண்ணில் தூசிபோல சிதைந்துவிட்டன.

அவர்கள் நரகத்திற்கு செல்வதில்லை. ஆனால் அவர்கள் ஹதீஸில் (Hades) இருந்து துன்புறுத்தல் அனுபவிப்பார்கள்.

இப்போது ஹேட்ஸில் (Hades) துன்பப்படுவது ஆன்மா மட்டுமே. அதேசமயம் நரகத்தின் துன்பப்படுவது ஒரு உயிர்த்தெழுந்த உடலிலுள்ள ஆன்மா.

*அவர்கள் நித்திய நரகத்திற்காக பொருத்தப்பட்ட நித்திய உடல் அல்லாமல் மாறாக உடல் மற்றும் நித்திய ஆன்மாவாக உள்ளனர்.*

***புத்தகம் திறக்கப்பட்டது.***

***ரோமர் 3:20****, இப்படியிருக்க, பாவத்தை அறிகிற அறிவு நியாயப்பிரமாணத்தினால் வருகிறபடியால், எந்த மனுஷனும் நியாயப்பிரமாணத்தின் கிரியையினாலே தேவனுக்கு முன்பாக நீதிமானாக்கப்படுவதில்லை.*

***எபேசியர் 2:8-9****, [8]கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு; [9]ஒருவரும் பெருமைபாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல;*

***மத்தேயு 7:21****, "பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கிக் கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை".*

***ஜீவ புத்தகம்***

***நியாயந்தீர்க்க எந்த அளவுகோளை பயன்படுத்துவார்கள்?***

***மத்தேயு 5:48****, ஆகையால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கிறதுபோல, நீங்களும் பூரண சற்குணராயிருக்கக்கடவீர்கள்.*

***1 பேதுரு 1:15-16****, [15]உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறதுபோல, நீங்களும் உங்கள்*

நடக்கைகளெல்லாவற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள். [16]நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள் என்று எழுதியிருக்கிறதே.

***கலாத்தியர் 3:10***, *நியாயப்பிரமாணத்தின் கிரியைக்காரராகிய யாவரும் சாபத்திற்குட்பட்டிருக்கிறார்கள்; நியாயப்பிரமாண புஸ்தகத்தில் எழுதப்பட்டவைகளையெல்லாம் செய்யத் தக்கதாக அவைகளில் நிலைத்திராதவன் எவனோ அவன் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறதே.*

***ரோமர் 3:23***, *எல்லாரும் பாவஞ்செய்து, தேவமகிமையற்ற வர்களாகி,*

***வெளி 17:8***, *நீ, கண்ட மிருகம் முன்னே இருந்தது, இப்பொழுது இல்லை; அது பாதாளத்திலிருந்து ஏறிவந்து, நாசமடையப்போகிறது. உலகத்தோற்றமுதல் ஜீவபுஸ்தகத்தில் பேரெழுதப்பட்டிராத பூமியின் குடிகள், இருந்ததும், இராமற்போனதும், இனி இருப்பதுமாயிருக்கிற மிருகத்தைப்பார்த்து ஆச்சரியப்படுவார்கள்.*

***அப்போஸ்தர் 4:12***, *அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை என்றான்.*

***வெவ்வேறு அளவிலானை தண்டனை வழங்கப்புடும்***.

***மத்தேயு 10:14-15***, *[14]எவனாகிலும் உங்களை ஏற்றுக்கொள்ளாமலும், உங்கள் வார்த்தைகளைக் கேளாமலும்போனால், அந்த வீட்டையாவது பட்டணத்தையாவது விட்டுப் புறப்படும்போது, உங்கள்*

*கால்களில் படிந்த தூசியை உதறிப்போடுங்கள். [15]நியாயத்தீர்ப்பு நாளிலே அந்தப் பட்டணத்திற்கு நேரிடுவதைப்பார்க்கிலும் சோதோம் கொமோரா நாட்டிற்கு நேரிடுவது இலகுவாயிருக்கும் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.*

***மத்தேயு** 11:22, நியாயத்தீர்ப்பு நாளிலே உங்களுக்கு நேரிடுவதைப்பார்க்கிலும் தீருவுக்கும் சீதோனுக்கும் நேரிடுவது இலகுவாயிருக்குமென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.*

***லூக்கா 12:47-48**, [47]தன் எஜமானுடைய சித்தத்தை அறிந்தும் ஆயத்தமாயிராமலும், அவனுடைய சித்தத்தின்படி செய்யாமலும் இருந்த ஊழியக்காரன் அநேக அடிகள் அடிக்கப்படுவான் [48]அறியாதவனாயிருந்து, அடிகளுக்கு ஏதுவானவைகளைச் செய்தவனோ சில அடிகள் அடிக்கப்படுவான். எவனிடத்தில் அதிகங் கொடுக்கப் படுகிறதோ அவனிடத்தில் அதிகங் கேட்கப்படும்; மனுஷர் எவனிடத்தில் அதிகமாய் ஒப்புவிக்கிறார்களோ அவனிடத்தில் அதிகமாய்க் கேட்பார்கள்*

*மற்றொரு புத்தகம் திறக்கப்பட்டது*

***தானியேல் 12:1**, உன் ஜனத்தின் புத்திரருக்காக நிற்கிற பெரிய அதிபதியாகிய மிகாவேல் அக்காலத்திலே எழும்புவான். யாதொரு ஜாதியாரும் தோன்றினதுமுதல் அக்காலமட்டும் உண்டாயிராத ஆபத்துக்காலம் வரும்; அக்காலத்திலே புஸ்தகத்தில் எழுதியிருக்கிறவர்களாகக் காணப்படுகிற உன் ஜனங்கள் அனைவரும் விடுவிக்கப்படுவார்கள்.*

***மல்கியா 3:16***, *அப்பொழுது கர்த்தருக்குப் பயந்தவர்கள் ஒருவரோடொருவர் பேசிக்கொள்வார்கள்; கர்த்தர் கவனித்துக்கேட்பார்; கர்த்தருக்குப் பயந்தவர்களுக்காகவும் அவருடைய நாமத்தைத் தியானிக்கிறவர்களுக்காகவும் ஞாபகப்புஸ்தகம் ஒன்று அவருக்கு முன்பாக எழுதப்பட்டிருக்கிறது.*

*"அன்பான தேவன் ஏன் இதை செய்ய வேண்டும்?"*

*தேவன் அன்பானவர் ஆனால் அதேசமயத்தில் அவர் நியாயமான தேவனும் கூட.*

*அன்பு காட்டும் தேவன் இதை செய்யவில்லை. ஆனால் பாவம் செய்கிறவனே இதை செய்திருக்கிறான்.*

*அக்கினிக் கடலுக்கு செல்ல வேண்டும் என்றால் தேவனை நிராகரித்திருக்க வேண்டும். நீங்கள் அவருடைய தார்மீக சட்டம், உங்கள் மனசாட்சி அதுதான் ஒவ்வொரு மனிதனுக்கும் கடவுள் கொடுத்த எச்சரிக்கை முறையையும் நிராகரிக்கிறீர்கள்.*

*நீங்கள் அவருடைய மகனான இயேசு கிறிஸ்துவையும் நிராகரிக்க வேண்டும்.*

*நீங்கள் சுவிசேஷத்தையும் நிராகரிக்க வேண்டும். தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்." "என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை" என்ற தேவனின் பணிவான அழைப்பையும் நீங்கள் நிராகரிக்க வேண்டும்.*

*நீங்கள் இயேசு கிறிஸ்துவின் உடலை உங்கள் காலடியில் மிதிக்க வேண்டும்.*

*அதனால், தேவனின் நீதியை பற்றியதான கேள்வி அல்ல, இது ஒரு மனுஷனும் மனுஷியும் பாவத்தை நேசித்து மாயத்தோற்றத்தை வாங்குவதைப் பற்றிய கேள்வியாகும்.*

*யாரும் தேவனை குற்றப்படுத்த முடியாது.*

*யாரையும் குற்றம்சாட்ட முடியாமல், தங்களைத்தாங்களே குற்றம் சாட்டுபவர்களுக்கான இடம் தான் நரகம்.*